பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 வைகாசி 14 சனிக்கிழமை 28.05.2022 கதிர் 97

## நாவாந்துறை விபத்தில் இளைஞர் ஒருவர் சாவு!

### மற்றொருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், கொட்டடி - நாவாந்துறைப் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் மற்றொருவர் படுகாயமடைந்தார்.

நேற்றிரவு 9.30 மணியளவில் ☞2



## மின்சார சபை உத்தியோகத்தர் சடலமாக மீட்பு!

(பாறுக் ஷிஹான்)

சிறுவனைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் தேடப்பட்ட ☞2

# யாழில் வீடொன்றிலிருந்து 2 பெண்கள் சடலமாக மீட்பு!

### - பொலிஸார் தீவிர விசாரணை

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவில் உள்ள வீடொன்றில் வயோதிபப் பெண்கள் இருவரின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டுள்ளன.

மாவடி, சங்கரத்தை என்ற இடத்தில் உள்ள வீடொன்றிலேயே இவ்வாறு சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

76 மற்றும் 73 வயதுகளையுடைய இருவரே உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இவர்களில் ஒருவர் இரண்டு வாரங்களுக்கு ☞2

## எழுதுமட்டுவாழில் கைக்குண்டு மீட்பு



யாழ்., கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எழுதுமட்டுவாழ் பகுதியில் துர்க்கை அம்மன் ஆலய வீதியில் உள்ள ☞2

# ரணிலுடன் இணைந்து நாட்டை மீட்டெடுப்பேன்



## பதவியிலிருந்து விலகவே மாட்டேன்; அமைச்சர்கள் முன் கோட்டா சபதம்

புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பேன்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச உறுதிபடத் தெரிவித்தார்.

அமைச்சர்களுடன் நடத்திய விசேட கலந்துரையாடலின் போதே அவர் இதனைக் கூறினார் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார். ☞2

## சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் மூவர் இன்று முதல் அதிரடி இடமாற்றம்!

### அஜித் றோஹண தென் மாகாணத்துக்கு



சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் சிலருக்கு இன்று முதல் திடீரென இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் இதனை அறிவித்துள்ளது.

இதன்படி, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஆர்.எஸ். தமிந்தவுக்கு தென் மாகாணத்திலிருந்து கிழக்கு மாகாணத்துக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. ☞2

## பொருளாதார மாநாடு நடத்த ரணில் திட்டம்!



இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி நிலைமையைச் சமாளித்து, அரசியல், பொருளாதார ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ☞2

## பொருளாதார நெருக்கடி நிலையை ரணிலால் வெற்றிகொள்ள முடியும்!

### அமெரிக்கா நம்பிக்கை

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அரசால் முடியும் ☞2



## 240 லீற்றர் பெற்றோலுடன் ஒருவர் வசமாக சிக்கினார்

240 லீற்றர் பெற்றோலுடன் 50 வயது நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பதுளை மாவட்டம், மடூல்சீமை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பிட்டமாறுவை பகுதியில் வியாபார நிலையத்தில் அதிக விலைக்குப் பெற்றோல் விற்பனை ☞2



## மின்சாரசபை உத்தியோகத்தர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வந்த மின்சார சபை உத்தியோகத்தர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் பெரிய நீலாவணைப் பொலிஸ் பிரிவில் பதிவாகியுள்ளது.

குறித்த சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:-

கடந்த வியாழக்கிழமை (26) வழமை போன்று மட்டக்களப்பு மாவட்டம், கல்லடி இலங்கை மின்சார சபை காரியாலயத்தில் கடமையாற்றும் 57 வயதான நுகர்வோர் ஒருங்கிணைப்பாளர் ஒருவர் கடமை நிமித்தம் களுவாஞ்சிக்குடிப் பொலிஸ் பிரிவிலுள்ள வீடொன்றுக்குச் சென்று மின்மானியை பரீட்சித்துள்ளார்.

பின்னர் அந்த வீட்டில் தாயுடன் நின்ற 9 வயது மதிக்கத்தக்க சிறுவனை அருகில் உள்ள வீட்டின் மின் மானியைப் பார்வையிடத் துணைக்கு அழைத்துச் சென்றுள்ளதுடன் அங்கு சிறுவனுடன் பாலியல் செயற்பாட்டில் ஈடுபட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார்.

அதன்பின்னர் சிறுவன் தனக்கு நடந்த அனைத்து விடயங்களையும் தனது பெற்றோரிடம் தெரிவித்துள்ளார். இதனால் குறித்த மின்சார சபை ஊழியர் அன்றைய தினம் தனக்கு எதிராகப் பாதிக்கப்பட்ட சிறுவனின் குடும்பத்தினர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதை அறிந்து மறுநாளான வெள்ளிக்கிழமை (27) அதிகாலை அம்பாறை மாவட்டம், பெரியநீலாவணை பொலிஸ் பிரிவில் அமைந்துள்ள தனது வீட்டின் அறையில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இதையடுத்து மனைவி உள்ளிட்ட உறவினர் தூக்கில் தொங்கியவரை மீட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் சேர்த்தனர். எனினும், தூக்கில் தொங்கியவர் ஏற்கனவே இறந்துவிட்டார் என்று வைத்தியசாலைத் தகவல்கள் குறிப்பிட்டன. உயிரிழந்தவர், உடல் கூற்று விசாரணையின்படி கழுத்துப் பகுதி சுருக்கினால் இறுகியதால் மூச்சுத் திணறி இறந்துள்ளார் தெரிவிக்கப்பட்டு உறவினர்களிடம் சடலம் கையளிக்கப்பட்டது.

உயிரிழந்தநபர்இருபிள்ளைகளின் தந்தை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பெரிய நீலாவணை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ரணிலுடன் இணைந்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார நெருக்கடியில் இருந்து என்னால் மாத்திரம் இலங்கையைக் காப்பாற்ற முடியாது. பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வுகாணும் திறன் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் உண்டு. அதனால்தான் அவரைப்புதிய பிரதமராக நியமித்துள்ளதுடன் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுப் பொறுப்புக்களையும் அவரிடம் ஒப்படைத்துள்ளேன். அதே வேளை, திறமைமிக்கவர்களை அமைச்சரவைக்கு உள்வாங்கி வருகின்றேன். அடுத்த வாரத்துக்குள் அமைச்சரவை நியமனம் முழுமை பெறும்.

அமைச்சரவை நியமனம் முழுமை பெற்றவுடன் ஜனாதிபதி பதவியிலிருந்து நான் விலகுவேன் என்று சில ஊடகச் செய்திகளைப் பார்த்தேன். எனினும், நான் ஒருபோதும் பதவி விலகமாட்டேன்.

ஜனாதிபதி - பிரதமர் - அமைச்சரவை ஓரணியில் செயற்பட்டால்தான் நாட்டுப் பிரச்சினைகளுக்குவிரைந்துதீர்வுகாண முடியும்.

இந்தப் புதிய அரசு சவால்களை எதிர்கொண்டு வெற்றிநடை போடும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இதற்கு அனைவரினதும் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

எதிரணியினரை நான் பகைக்கவில்லை. அவர்களையும் அரவணைத்துக் கொண்டு நாட்டுக்காக நாம் அனைவரும் பணியாற்ற வேண்டும் என ஜனாதிபதி மேலும் கூறினார் என்றார் அமைச்சர் பீரிஸ்.

## பொருளாதார மாநாடு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீவிரமாக இறங்கியுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதற்கானவழிமுறைகள் பற்றியும் ஆராய்ந்து வருகின்றார்.

இதன்படி உலக நாடுகளின் ஒத்துழைப்பு மற்றும் முதலீடுகளை பெறும் நோக்கில் 'பொருளாதார மாநாடு' ஒன்றை நடத்துவதற்குப் பிரதமர் திட்டமிட்டுள்ளார்.

இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தை முன்வைப்பதற்கு முன்னர் இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகும் எனத் தெரியவருகின்றது.

இலங்கையில் பொருளாதார மறுசீரமைப்பு இடம்பெற்றால், உதவிகளை வழங்குவதற்கும், முதலீடுகளை செய்வதற்கும் தயார் என வெளிநாட்டு நிறுவனங்கள்கூட அறிவித்துள்ளன. எனவே, இடைக்கால வரவு - செலவுத் திட்டத்தின் பொருளாதார மறுசீரமைப்பு திட்டங்களும் முன்வைக்கப்படவுள்ளன.

அதேபோல நன்கொடையாளர் மாநாடு, சுற்றுலாத்துறை மாநாடு உள்ளிட்ட ஏற்பாடுகளும் இடம்பெறவுள்ளன என்று தெரியவருகின்றது.

## யாழில் வீடொன்றி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்பாகவும், மற்றையவர் இரண்டு நாள்களுக்கு முன்னரும் உயிரிழந்திருக்கலாம் என்றும் நம்பப்படுகின்றது.

குறித்த வீட்டில் இருவர் மட்டுமே வசித்து வந்த நிலையில், அவர்களுக்கு உதவிக்கு யாரும் இருந்ததில்லை என்றும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவரும் மாதாந்த உதவிப் பணம் பெற்றுக்கொள்ளவில்லை என்று கிராம அலுவலகர் வீடு தேடிச் சென்றபோதே அவர்கள் இருவரும் சடலங்களாகக் காணப்பட்டுள்ளனர்.

இருவரும் மர்மமான முறையில் உயிரிழந்துள்ள நிலையில், பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## எழுதுமட்டுவாழில்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தனியார் காணி ஒன்றில் வெடிக்காத நிலையில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் கைக் குண்டு ஒன்று காணப்படுகின்றது என இராணுவத்தினருக்கு நேற்றுக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கைக்குண்டை மீட்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்

## நாவாந்துறை........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்ற வந்த விபத்தில் 31 வயதான நவரட்ணராஜா சங்கீத் என்பவர் உயிரிழந்தார்.

அவருடன் பயணித்தவர் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அதிவேகமாக மோட்டார் சைக்கிளில் பயணித்தமையே விபத்துக்குக் காரணம் எனத் தெரியவரும் நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிரேஷ்ட பொலிஸ்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குற்றவியல் மற்றும் போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தென்மாகாணத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளார்.

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எல்.கே.டப்ளியூ. கே. சில்வா கிழக்கு மாகாணத்திலிருந்து குற்றவியல் மற்றும் போக்குவரத்துப் பிரிவுக்கு இடமாற்றப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

## 240 லீற்றர்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்படுகின்றது எனப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, கொள்கலன்களில் இருந்து மொத்தமாக 240 லீற்றர் பெற்றோல் மீட்கப்பட்டுள்ளது. கைதானவர், பிட்டமாறுவ பகுதியைச் சேர்ந்தவராவார்.

குறித்த சந்தேகநபர் பதுளை நீதிவான் முன்னிலையில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளார்.

## பொருளாதார நெருக்கடி..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எனத் தான் நம்புகிறேன் என அவர் இதன் போது குறிப்பிட்டார்.

அதேபோன்று மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கை - ஐக்கிய அமெரிக்க நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் ஊடாக இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்த எதிர்பார்ப்பதாகவும் ஜூலி சங் தெரிவித்தார்.

நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மேற்கொள்ளும் பணிகளைப் பாராட்டிய அவர், நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் அவசியம் குறித்தும் கலந்துரையாடினார்.

இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்த ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் வழங்கிவரும் பங்களிப்புக்கு சபாநாயகர் தனது நன்றியைத் தெரிவித்தார். ஜூலி சங், இந்நாட்டுக்கான ஐக்கிய அமெரிக்க தூதுவராக நியமிக்கப்பட்டதை அடுத்து சபாநாயகருடன் இடம்பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622






# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசமைப்பு திருத்த நாடகம்

**21 ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான சர்ச்சை இப்போது கிளம்பியுள்ளது.**

**19 ஆவது திருத்தத்தின் மூலம் வெட்டிக் குறைக்கப்பட்டு, 20 ஆவது திருத்தம் மூலம் திரும்பவும் ஜனாதிபதிக்கு மீளளிக்கப்பட்ட அதிகாரங்கள், 21 ஆவது திருத்தம் மூலம் மீண்டும் நீக்கப்படும் என அண்மைக்காலத்தில் ஆட்சி முறைமைக்கு எதிரான மக்கள் கிளர்ச்சி தீவிரம் கொண்டிருந்தபோது உறுதியளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில்தான் – அந்த உறுதிமொழியை நிறைவேற்றும் நோக்கில்தான் – இப்போது 21 ஆவது திருத்த யோசனை வரைவு முன்வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வருவது பழைய 19 அல்ல; 19 மைனஸ் தான் என்பது வெளிப்படை.**

**19 ஆவது திருத்தத்தின் படி அது கொண்டு வரப்பட்ட சமயம் இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மட்டும் அவரது பதவிக் காலம் முடியும் வரை பாதுகாப்பு, சுற்றுச்சூழல், மகாவலி அபிவிருத்தி ஆகிய மூன்று அமைச்சுக்களை அவர் தம்முடன் வைத்திருக்கும் விசேட உரிமை வழங்கப்பட்டிருந்தது. அதற்குப் பின்னர் வரும் ஜனாதிபதிகளுக்கு அந்த உரித்து இல்லை என்பதுதான் 19ஆவது திருத்த ஏற்பாடு.**

**அப்படியொரு தீர்மானம் அப்போது எடுக்கப்பட்டமையில் ஒரு நியாயம் இருந்தது .ஜனாதிபதி எந்த அமைச்சையும் தம் விருப்பப்படி வைத்திருக்கலாம் என்ற அரசமைப்பு ஏற்பாடு நடைமுறையில் இருந்த சமயம், அதன் கீழ் மக்கள் ஆணை பெற்று ஜனாதிபதியானவர் மைத்திரிபால சிறிசேன. அந்த மக்கள் ஆணையின்படி, அவரது பதவிக் காலம் முடியும்வரை அவர் குறிப்பிட்ட இந்த மூன்று அமைச்சுகளையும் அவரே வைத்திருக்க நாடாளுமன்றம் அனுமதித்து 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றியது.**

**ஆனால், ஜனாதிபதி கோட்டாபயவின் தெரிவு அப்படிப் பட்டதல்ல. அவர் ஜனாதிபதியாகத் தெரிவான சமயம் 19 ஆவது திருத்தமே நடைமுறையில் இருந்தது. அதா வது ஜனாதிபதி எந்த அமைச்சையும் தம் வசம் வைத்திருக்க முடியாது என்ற அரசமைப்பு ஏற்பாட்டின் கீழேயே மக்கள் ஆணையை அவர் பெற்றிருந்தார். ஆனால் பதவிக்கு வந்த பின்னர், 20 ஆவது திருத்தத்தை ஏற்படுத்தி, பறிக்கப்பட்ட அந்த அதிகாரங்களை எல்லாம் மீளவும் கைப்பற்றிக் கொண்டார். அதன் விளைவுதான் இந்த மோசமான நிலைமையை ஏற்படுத்தியது என மக்கள் கொதித்தெழுந்தனர். அதை அடுத்து அப்படி தாம் மீளப் பிடுங்கிய அதிகாரங்களை கைவிட இணங்கிய அவர், இப்போது அமைச்சர் பதவிகளைத் தான் வைத்திருக்கும் அதிகாரத்தை மட்டும் கைவிட மறுக்கின்றார்.**

**19 ஆவது திருத்தப்படி அமைச்சர்கள் யார் என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் மட்டுமே பிரதமருக்குரியது. ஆனால், அவர்களில் யார், யாருக்கு எந்தெந்த அமைச்சை ஒதுக்குவது என்ற அதிகாரம் ஜனாதிபதியிடமேயுள்ளது. இந்த நிலையில் தாம் விரும்பும் அமைச்சுக்களை ஜனாதிபதி தம்வசம் வைத்திருக்கலாம் என்ற அதிகாரம் நீடிக்குமானால் இவ்விடயத்தில் பிரதமருக்கு பகிரப்படக்கூடிய அதிகாரம் செல்லாக்காசாகி விடும்.**

**பிரதமர் கொடுக்கும் பெயர்ப் பட்டியல் படி அமைச்சர்களை நியமித்து விட்டு, முக்கிய அமைச்சுக்களையும், அவற்றின் கீழான நிறுவனங்கள் அனைத்தையும் தம் இஷ்டப்படி ஜனாதிபதி தம்முடன் வைத்திருந்தால், பிரதமரின் பரிந்துரையில் அமைச்சராகும் அனைவரும் அதிகாரமற்ற – வெறும் பெயருக்கு அமைச்சர்களாக – இருப்பவர்களாக மாறிவிடுவர். ஜனாதிபதியின் கைகளில்தான் முழு விடயங்களும் அதிகாரங்களும் தங்கிவிடும்.**

**ஆகவே 21 ஆவது திருத்தம் கன்துடைப்பாக வரக்கூடாது. அர்த்தமுள்ள வகையில் – குறைந்தபட்சம் 19 ஆவது திருத்தத்தில் கூறப்பட்ட விடயங்களையாவது முழுமையாக உள்ளடக்கி – அது அமைவது அவசியம்.**

# ஓர் ஆசனத்தை மட்டும் வைத்துக்கொண்டு ரணில் ஜனாதிபதியாகவும் உருவெடுப்பார்!

## வஜிர அபேவர்த்தன ஆரூடம்



ரணில் விக்கிரமசிங்க ஒரே ஓர் ஆசனத்தை மட்டும் வைத்துக்கொண்டு பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் உருவாகும் வல்லமை கொண்டவர் என தான் முன்னர் கூறியமை இன்று நடந்து கொண்டிருக்கின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

காலியில் நடைபெற்ற கட்சி உறுப்பினர்களுடனான கூட்டத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர் –

அரசியலில் எனக்கு இருக்கின்ற அனுபவங்களை வைத்து நான் ரணில் நாடாளுமன்றத்துக்கு தேசியப் பட்டியல் ஆசனம் ஊடாக வரும்போது ஒரு விடயத்தைக் குறிப்பிட்டேன். அதாவது ஓர் ஆசனத்தை வைத்துக்கொண்டு ரணில் பிரதமராகவும் ஜனாதிபதியாகவும் உருவெடுப்பார் என்று நான் கூறினேன். அது தற்போது நடந்து கொண்டிருக்கின்றது.

இன்று ரணில் பிரதமராகி விட்டார். நான் அன்று கூறிய விடயம் அவ்வாறே நடந்து கொண்டு இருக்கின்றது. அதனால் பதற்றமடையாமல் பொறுமையுடன் பார்த்துக் கொண்டிருங்கள். நான் கூறியது எல்லாம் நடக்கும்.

அதுமட்டுமன்றி டொலர் இல்லாத – ரூபா இல்லாத – ஒரு திறைசேரியையே ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுக் கொண்டார். அதுவும் மிகவும் தாமதமாகவே ரணிலுக்கு கிடைத்திருக்கின்றது. அப்படி காலியான வெறுமையான திறைசேரி கிடைத்திருந்தாலும் கூட மக்களின் பிரச்சினைகளுக்கு பிரதமர் ரணில் தீர்வைப் பெற்றுக் கொடுப்பார்.

சிறிய தாமதம் ஏற்படும். ஆனால் பதற்றப்படாமல் அவசரப்படாமல் பொறுமையுடன் பார்த்துக்கொண்டிருங்கள். பிரச்சினைகளை ரணில் விக்கிரமசிங்க தீர்த்து வைப்பார். – என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்.போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சை பிரிவுக்கு மூன்றாவது தடவையாக சிவபூமி அறக்கட்டளை பேருதவி




சிவபூமி அறக்கட்டளை நிறுவனம் மூன்றாவது தடவையாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சத்திரசிகிச்சைப் பிரிவுக்குஒரு தொகை மருந்துப் பொருள்களை வழங்கியுள்ளது.

நேற்று (வெள்ளிக்கிழமை) மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர்களான வைத்தியர் ஸ்ரீபவானந்தராஜா மற்றும் வைத்தியர் சி.யமுனாநந்தா ஆகியோரிடம் சிவபூமி அறக்கட்டளையின் தலைவரும், பிரபல சைவத்தமிழ்ச் சொற்பொழிவாளருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் மேற்படி மருந்துப் பொருள்களைக் கையளித்தார்.

இதேவேளை, சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்திடம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவினர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய அவசிய மருந்துத்தேவை தொடர்பான ஒருபகுதி மருந்து கொழும்பில் கொள்வனவு செய்யப்பட்டு புற்றுநோய் வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி கிருஷாந்தி ராஜசூரியரிடம் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கையளிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# நான்கு மாத சினைப்பசு இறைச்சியாக்கப்பட்டது!

## வட்டு. பொலிஸாருக்கு அறிவித்தும் நடவடிக்கை இல்லை

நான்கு மாத சினைப்பசுவைத் திருடி இறைச்சியாக்கி விற்பனை செய்த மாபாதகச் செயல் வலி.மேற்கில் அரங்கேறியுள்ளது. பொன்னாலை வயலில் கட்டிநின்ற பசு மாடு ஒன்றே இரவோடிரவாகத் திருடப்பட்டு இவ்வாறு இறைச்சியாக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் செயலில் ஈடுபட்டவர்கள் தொடர்பான விவரங்களை வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு தெரியப்படுத்திய போதிலும் அவர்கள் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக அகில இலங்கை சைவ மகா சபைக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொன்னாலையைச் சேர்ந்த பா.பராபரன் என்பவரின் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான நான்கு மாத சினைப்பசு பொன்னாலையில் உள்ள அவரது வயற்காணியில் ஏனைய மாடுகளுடன் கட்டப்பட்டிருந்தது. கடந்த சனிக்கிழமை இரவு குறித்த மாடு காணாமற்போயிருந்தது.

இது தொடர்பாக மறுநாள் ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. தொடர்ந்து உரிமையாளர்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள இறைச்சிக் கடைகளுக்கும் சென்று, இறைச்சியாக்கும் மாடுகள் உள்ள இடங்களில் தேடியுள்ளனர். எனினும் மாடு கிடைக்கவில்லை.

இதையடுத்து, பொன்னாலை பெரியகுளத்துக்கு சமீபமாக, நாகதம்பிரான் ஆலயத்துக்கு அருகே மாட்டின் தோல், மாடு கட்டப்பட்டிருந்த கயிறு, எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டன. அயல் ஊரைச் சேர்ந்த சிலர் மாட்டை இறைச்சியாக்கி ஓட்டோவில் இறைச்சியை ஏற்றிச் சென்று விற்பனை செய்யப்பட்டமையும் பின்னர் தெரியவந்தது.

இந்தச் சம்பவத்தில் ஈடுபட்ட நபர்கள், இதற்கு பயன்படுத்தப்பட்ட ஓட்டோ மற்றும் இறைச்சி வாங்கியவர்களின் பெயர் விவரங்கள் வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு வழங்கப்பட்டன.

எலும்பு, தோல் என்பவற்றை வீட்டுக்குக் கொண்டுசென்று வைத்திருங்கள். தாங்கள் விசாரணை நடத்துகின்றோம் எனப் பொலிஸார் கூறினர் எனவும் இதுவரை அவர்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் மாட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.

பொலிஸார் வரவில்லை, வீட்டில் வைக்கப்பட்டுள்ள மாட்டின் எச்சங்கள் துர்நாற்றம் வீசுகின்றன. எமக்கு நீதியை வழங்க நடவடிக்கை எடுங்கள் எனத் தெரிவித்து மாட்டின் உரிமையாளர் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் நேற்று (வெள்ளிக்கிழமை) முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, பசுவதை மற்றும் குறி சுடுதலுக்கு எதிராகத் தொடர்ச்சியாக குரல் கொடுத்துவரும் அகில இலங்கை சைவ மகா சபையின் கவனத்திற்கும் இந்த விடயத்தைக் கொண்டுசென்றுள்ளனர்.

# ரஷ்ய படைகள் கிழக்கு உக்ரைனை கைப்பற்ற தாக்குதலை தீவிரமாக்கியுள்ளனவாம்




ரஷ்ய படைகள் கிழக்கு உக்ரைனை கைப்பற்ற தாக்குதலை தீவிரமாக்கியுள்ளன என தகவல் வெளியாகியுள்ளது. ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் உத்தரவின் பேரில், ரஷ்யப் படையினர் கடந்த பெப்ரவரி 24ம் திகதி உக்ரைனில் ராணுவத் தாக்குதலைத் தொடங்கினர். உக்ரைன், நேட்டோ அமைப்பில் சேர்வதை எதிர்த்து ரஷ்யாவால் தொடங்கப்பட்ட இந்தப் போர், கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

போர் மேகம் சூழ்ந்திருக்கும் உக்ரைனில், ரஷ்யப் படை வீரர்கள் அந்த நாட்டுப் பெண்களை பாலியல் வன்கொடுமை செய்வது, ராணுவ வீரர்களைத் தாண்டி பொதுமக்களைக் கொன்றுகுவிப்பது என சட்டவிரோத செயல்களில் ஈடுபட்டுவருவதாக உக்ரைன் தொடர்ந்து குற்றம்சாட்டி, உலக நாடுகளிடம் முறையிட்டுவருகிறது

இந்தநிலையில், கிழக்கு உக்ரைனை கைப்பற்றும் முயற்சியில் லுஹான்ஸ்க் பிராந்தியத்தில் முகாமிட்டிருந்த ரஷ்ய ராணுவத்தினரை உக்ரைன் ராணுவத்தினர் குண்டுவீசித் தகர்த்தெறிந்தாக கூறப்படுகிறது. உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் 2ஆவது பெரிய நகரமாக கார்கிவ்வை கைபற்ற தவறிய ரஷ்யா, கிழக்கு உக்ரைன் பகுதிகளைகைபற்றும்முயற்சியில் ஆயிரக்கணக்கான ரஷ்ய வீரர்களை குவித்து கடும் தாக்குதல் நிகழ்த்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

## சமூகப் பரவல் நோயாக குரங்கம்மை மாறக்கூடும்

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை




'குரங்கம்மை நோய்' சமூக பரவலாக மாறும் அபாயம் உள்ளதாக உலக சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக உலக மக்களை கொரோனா ஆட்டிப் படைத்தது. இந்நிலையில், ஆபிரிக்க நாடுகளில் பரவிய குரங்கம்மை நோய், தற்போது மெதுவாக பல்வேறு நாடுகளுக்கு பரவி வருகிறது. தற்போதைய நிலைவரப்படி, 20 நாடுகளில் 200 பேருக்கு இது தாக்கி இருக்கிறது.

இந்நோய் பரவல் குறித்து உலக சுகாதார அமைப்பின், 'உலக தொற்று அபாய தயார் நிலை' குழுவின் இயக்குநர் சில்வி பிரையன்ட் நேற்று கூறுகையில்,"மக்கள் கவலைப்படும் அளவுக்கு குரங்கம்மை வேகமாக பரவும் நோயல்ல. ஆனால், மெதுவாக இது சமூக பரவலாக மாறக்கூடிய அபாயம் உள்ளது. இதை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு விரைவான நடவடிக்கை தேவை. தடுப்பூசியும், முறையான சிகிச்சையும் இதற்கு ஒரே தீர்வு. சில நாடுகளிடம் மட்டுமே இந்த நோய்க்கான முதல் தலைமுறை தடுப்பூசிகள் கையிருப்பு இருக்கின்றன. உலகளவில் எவ்வளவு தடுப்பூசிகையிருப்பு இருக்கிறது என்ற புள்ளி விவரம் இல்லை. பாதிக்கப்பட்டவர்களை கண்டுபிடித்து, தனிமைப்படுத்துவதே, இதன் பரவலை தடுப்பதற்கான முதல் கட்ட நடவடிக்கையாகும்," என்றார்.



## மூடுபனிக்கு நடுவே காட்சியளிக்கும் சிட்னி

சிட்னி நகரில் நிலவிய அடர்ந்த மூடுபனியால், நகரில் உள்ள வானுயர்ந்த பிரமாண்ட கட்டடங்கள் மற்றும் நினைவு சின்னங்கள் பனியால் மூடப்பட்டன. ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் அதிகாலை கடுமையான மூடுப்பனி நிலவி வருகிறது.

இதனால் எதிரே வரும் ஆள்கள், கட்டடங்கள் கண்ணுக்கு புலப்படாத வகையில் பனி படந்துள்ளது. கடும் பனிமூட்டத்தால், சிட்னி நகரில் உள்ள வானுயர்ந்த பிரமாண்ட கட்டடங்கள் மற்றும் துறைமுகப் பாலம் மற்றும் சிட்னி ஓபரா ஹவுஸ் போன்ற நினைவு சின்னங்களும் பனியால் மூடப்பட்டன.

அடர்ந்த மூடுபனியால் படகு சேவைகள் ரத்து செய்யப்பட்டமையோடு, ஓட்டுநர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து, நாட்டின் வானிலை ஆய்வு மையம் சாலை வானிலைஎச்சரிக்கையையும்வெளியிட்டுள்ளது. உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்கள் வீட்டிற்குள் இருக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளது. புகை சுவாச மண்டலத்தை எரிச்சலடையச் செய்யலாம், நுரையீரல் நோய் மற்றும் இதய நோய்களை மோசமாக்கும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.



## வடகொரியா மீதான தீர்மானத்தை சீனாவும் ரஷ்யாவும் தோற்கடித்தன

### அமெரிக்காவுக்கு ஏமாற்றம்

வட கொரியா மீது கூடுதல் தடைகளை விதிக்கும் வகையில் ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை ரஷ்யாவும், சீனாவும் தனது வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி தோற்கடித்தன. ஐ.நா. போன்ற சர்வதேச அமைப்புகள், அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளின் கடும் எதிர்ப்பையும் மீறி, வடகொரியா தொடர்ந்து அணு ஆயுதங்களை தாங்கிச் செல்லும் ஏவுகணைகளை சோதனை செய்து வருகிறது. அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகளை அச்சுறுத்தும் வகையிலேயே இந்த ஏவுகணை சோதனைகளில் அது ஈடுபட்டு வருகிறது.

இந்த ஆண்டு தொடக்கம் முதல் இதுநாள் வரை வடகொரியா 23 முறை ஏவுகணை பரிசோதனைகளை செய்து உள்ளது. சில நாட்களுக்கு முன் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தென் கொரியாவுக்கு அரசு முறை சுற்றுப் பயணம் சென்றார்.

அவர் அந்த நாட்டில் இருந்து புறப்பட்ட சென்ற சில மணி நேரத்தில், வட கொரியா கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணை உள்பட 3 ஏவுகணைகளை ஏவி அடுத்தடுத்து சோதனை நடத்தியது. இது மேற்கத்திய நாடுகளுக்கு அச்சம் விளைவித்துள்ள நிலையில், வட கொரியாவின் மீதான கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா முடிவு செய்தது.

அதற்கான தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலில் அமெரிக்கா நேற்று கொண்டு வந்தது. 15 உறுப்பினர்களை கொண்ட பாதுகாப்பு கவுன்ஸிலில் 13-2 என்ற அடிப்படையில் தீர்மானம் தோல்வி அடைந்தது.

ற்றநாடுகள் ஆதரித்து வாக்களித்த நிலையில், ரஷ்யாவும், சீனாவும் தங்கள் வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி, அமெரிக்காவின் இந்த தீர்மானத்தை தோற்கடித்து வட கொரியாவை காப்பாற்றின. இதனால், அமெரிக்கா ஏமாற்றம் அடைந்தது.

# ஹரியானா முன்னாள் முதலமைச்சருக்கு சொத்துக் குவிப்பு வழக்கில் 4 ஆண்டு சிறை



கடந்த 1993 முதல் 2006 ஆம் ஆண்டு வரை முறைகேடாக 6 கோடி ரூபாவுக்கும் அதிகமான சொத்துக்களைச் சேர்த்தார் என ஹரியானா முன்னாள் முதலமைச்சர் ஓம் பிரகாஷ் சவுதாலா மீது சி.பி.ஐ. வழக்குப்பதிவு செய்தது.

இந்த வழக்கில் சவுதாலாவுக்கு எதிராக கடந்த 2010 ஆம் ஆண்டு மார்ச் 26 ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கை விசாரித்த டெல்லியின் ரோஸ் அவென்யூ நீதிமன்றம் ஓம் பிரகாஷ் சவுதாலா குற்றவாளி என கடந்த வாரம் தீர்ப்பு அளித்தது. அவருக்கு விதிக்கப்படும் தண்டனை விவரம் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், தண்டனைஅளிப்பது குறித்த வாதம் முடிந்த நிலையில் டெல்லி ரோஸ் அவென்யூ நீதிமன்றம் நேற்று தீர்ப்பளித்தது. அதில், ஓம் பிரகாஷ் சவுதலாவுக்கு 4 ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 50 லட்சம் ரூபா அபராதமும் விதித்து சி.பி.ஐ. நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கச்சதீவு, நீட் பிரச்சினைகளுக்கு தி.மு.க.தான் காரணம் முன்னாள் தமிழக அமைச்சர் செல்லூர் ராஜு சாடல்!




சென்னையில் நடைபெற்ற விழாவில் பிரதமர் நரேந்திர மோடி மதுரை - போடி நகரங்களுக்கு இடையிலான அகலப்பாதை ரயில் திட்டத்தை நேற்று மாலை தொடங்கி வைத்தார். இதற்காக மதுரை ரயில் நிலையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் தமிழக அமைச்சர் செல்லூர் ராஜு மற்றும் அ.தி.மு.க., பாரதிய ஜனதா கட்சிப் பிரமுகர்கள், ரயில் அதிகாரிகள் போன்றோர் கலந்துகொண்டனர்.


பின்னர் மதுரை ரயில் நிலையத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு ஊடகவியலாளர்களைச் சந்தித்தார். மதுரை-தேனி ரயில் கனவுத் திட்டம் நிறை வேற்றப்பட்டுள்ளது. இதற்காக தென் மாவட்டமக்கள் சார்பாக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தும்பை விட்டு வாலைப் பிடிப்பது போன்று தி.மு.க. ஆட்சிக் காலத்தில் தான் கச்சதீவு கொடுக்கப்பட்டது. கருணாநிதி ஆட்சியில்தான் கச்சதீவு தாரைவார்க்கப்பட்டது.

தற்போது அவருடைய மகன் முதல்வர் மு.க. ஸ்டாலின் பிரதமரிடம் கச்சதீவை மீட்குமாறு கேட்கிறார். நீட் தேர்வு குறித்து முதல்வர் மேடையில் பேசியது விளம்பரம் தேடுவதற்காகவே. ஏனென்றால் தி.மு.க. ஆதரவுடன் மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ்தான் 2010 ஆம் ஆண்டு நீட் தேர்வு மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றியது. அப்போதைய தி.மு.க. மத்திய அமைச்சர் காந்திசெல்வன் கையெழுத்திட்டார். இப்போது நீட்தேர்வு விவகாரம் உச்ச நீதிமன்றத்தில் உள்ளது. எனவே, கச்சதீவு மற்றும் நீட்தேர்வுப் பிரச்சினைகளில் தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் கதையாக தி.மு.க. அரசியல் நாடகம் நடத்தி வருகிறது.

இந்தப் பிரச்சினைகளுக்குக் காரணமே தி.மு.க. தான். வளர்ந்த மாநிலங்களிடம் இருந்து அதிக வரி வருவாயைப் பெற்றாலும் மத்திய அரசின் நிதி ஒதுக்கீடு குறைவாக இருக்கிறது, கூடுதல் நிதி ஒதுக்கீடு வேண்டுமென முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அப்போது ஆணித்தரமாக கூறியிருந்தார்கள். தி.மு.க. ஒரு வருடத்தில் அதிகமான அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது. ஆனால், அவர்கள் அறிவித்த திட்டங்கள் பல தோல்வியடைந்து விட்டன, என்று முன்னாள் அமைச்சர் செல்லூர் ராஜு கூறியிருக்கிறார்.


## குட்கா, பான் மசாலா புகையிலைப் பொருள்களுக்கு மேலும் ஓராண்டுக்குத் தடை விதித்தது தமிழக அரசு





தமிழகத்தில் குட்கா, பான் மசாலா, புகையிலை உள்ளிட்ட பொருள்களை இளைஞர்கள் அதிக அளவில் பயன்படுத்தி வந்த நிலையில், அவற்றுக்கு இளைஞர்கள் அடிமையாவதைத் தடுக்கவும், அந்தப் பொருள்களால் உடலுக்கு புற்றுநோய் பாதிப்பு ஏற்படும் அபாயம் இருந்ததாலும் புகையிலைப் பொருள்களுக்கு கடந்த 2010 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு தடை விதித்து வருகிறது. இந்தத் தடை கடந்த மே23ஆம்திகதிநிறைவடைந்த நிலையில் இந்தத் தடையை மேலும் ஓராண்டுக்கு நீடித்து தமிழக அரசு உத்தர விட்டுள்ளது.

குட்கா, பான் மசாலா, புகையிலைப் பொருள்களைத் தயாரிக்கவும், விநியோகிக்கவும், பாதுகாக்கவும் மேலும் ஓராண்டுக்குத் தடை விதித்து தமிழக அரசு அரசிதழை வெளியிட்டுள்ளது.



## மீண்டும் தலை தூக்குகிறது தமிழகத்தில் கொரோனா





தமிழ்நாட்டில் சமீப நாள்களாக கொரோனாத் தொற்று மிகவும் குறைந்து வந்ததாக தரவுகள் தெரிவித்திருந்தன. கடந்த 24 மணி நேரத்தில் 59 பேருக்கு மட்டுமே கொரோனாத் தொற்று பதிவாகியிருந்தது.

இந்த நிலையில் தற்போது சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் கொரோனா பரவல் அதிகரித்து வருவதாக மாவட்ட ஆட்சியர்களுக்கு மக்கள் நல்வாழ்வுத்துறை செயலாளர் ஜெ. ராதாகிருஷ்ணன் கடிதம் எழுதியுள்ளார். அவற்றைக் கட்டுப்படுத்த தீவிர கண்காணிப்பை மேற்கொள்ளவும் அறிவுறுத்தியுள்ளார். அவர் எழுதிய கடிதத்தில், தமிழகத்தில் இதுவரை 93.74 சதவீதம் பேர் முதல் தவணைத் தடுப்பூசியைச் செலுத்தியுள்ளனர். 82.55 சதவீதம் பேர் இரண்டாவது தவணைத் தடுப்பூசி செலுத்தியுள்ளனர், என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

## 'கோ பக் மோடி' என்ற கோஷத்தை இம்முறை கையில் எடுக்காதது ஏன்? ம.தி.மு.க. தலைமைக் கழகச் செயலாளர் துரை வைகோ விளக்கம்

பிரதமர் மோடி சென்னை வரும்போதெல்லாம் 'கோ பக் மோடி' கோஷம் டிரெண்டிங் ஆகும். ம.தி.மு.க. ஆவேசமாக இந்தக் குரலைக் கையில் எடுக்கும். ஆனால், இந்த முறை அமைதியாக இருந்தது பற்றி ம.தி.மு.க. தலைமைக் கழகச் செயலாளர் துரை வைகோவிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அதற்கு அவர் பதிலளிக்கும்போது, கடந்த காலச் சூழ்நிலை வேறு. அப்போது நீட் எதிர்ப்பு தலைதூக்கி நின்றது. தமிழகத்துக்கு எதிராகப் பல பிரச்சினைகளும் தலைதூக்கி நின்றன.

ஆனால், இந்த முறை தமிழக மக்கள் நலனுக்காக 31,500 கோடி ரூபா மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைக்க அவர் வந்தார். முழுக்க முழுக்க தமிழக மக்கள் நலன் சார்ந்த திட்டங்களை ஆரம்பித்து வைக்க வந்தார். இந்தச் சூழ்நிலையில் 'கோ பக் மோடி' என்பது நியாயமல்ல, முறையல்ல.

தமிழக மக்களிடம் மோடி மீது அன்பும் ஆதரவும் பெருகி இருப்பதாக அமித்ஷ ஷா குறிப்பிட்டுள்ளார். அதனைத் தேர்தல் வரும்போதுதான் பார்க்க வேண்டும். தமிழகத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து விட்டது, கொலைகள் அதிகரித்து விட்டன என்பது சரியான கருத்தல்ல. கடந்த ஆட்சியிலும் கொலைகள் நடந்தன. ஆனால், இப்போது குற்றவாளிகளை உடனே பிடிக்கிறார்கள். நடவடிக்கை எடுக்கிறார்கள்.

பேரறிவாளன் விடுதலை என்பது காலம் கடத்தி வழங்கப்பட்டுள்ள தீர்ப்பு. அவரது விடுதலையைக் காங்கிரஸ் எதிர்ப்பது அந்தக் கட்சியின் தனிப்பட்ட கொள்கை. மோடி நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அரசியல் செய்தார் என பா.ஜனதா தலைவர் அண்ணாமலை கூறியிருக்கிறார். அவர் அரசியல் செய்யவில்லை. அண்ணாமலைதான் அவதூறு பரப்புகிறார். அவரது பெயரையே நான் அவதூறு அண்ணாமலை என்றுதான் கூறுவேன், என்றும் துரை வைகோ தெரிவித்தார்.

## ஆந்திர சட்டசபைக்கு முன்கூட்டியே தேர்தல் நடத்துவதற்கு ஜெகன்மோகன் திட்டமிடுகிறார் என்கிறார் சந்திரபாபு நாயுடு

ஆந்திர மாநிலத்தின் ஓங்கோலில் தெலுங்கு தேசம் கட்சியின் மாநாடு நடக்கிறது. அதில் பங்கேற்க அக்கட்சியின் தலைவர் சந்திரபாபு நாயுடு, விஜயவாடாவில் இருந்து ஓங்கோலுக்கு மோட்டார் சைக்கிளில் பேரணியாகப் புறப்பட்டு, வழியில், சிலகலூரிபேட்டையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பங்கேற்றார்.

அங்கு உரையாற்றிய சந்திரபாபு நாயுடு, தெலுங்கு தேசம் கட்சி மீது பழிபோடுவதற்காக வை.எஸ்.ஆர்.காங்கிரஸ் பிரமுகர்கள், தங்கள் வீடுகளுக்குத் தாங்களே தீவைத்துக்கொள்கிறார்கள். நெருப்பில் இருந்து அமைச்சர் குடும்பத்தினரைக் காப்பாற்றிய பொலிஸாரால் வீட்டைக் காப்பாற்ற முடியவில்லை என்பது சந்தேகமாக உள்ளது.

இனிமேலும் ஜெகன்மோகன் ரெட்டியால் மாநிலத்தை ஆள முடியாது. அதனால்தான் திறமையற்ற அவர் சட்டசபைக்கு முன்கூட்டியே தேர்தலை நடத்தத் திட்டமிட்டுள்ளார் என்று, சந்திரபாபு நாயுடு தெரிவித்திருக்கிறார்.



# நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்கள் கொடுப்பனவை தியாகம் செய்ய முடிவு




(பாறுக் ஷிஹான்)

நாட்டின் பொருளாதார நெருக்கடியை முன்னிட்டு நிந்தவூர் பிரதேச சபையின் பதவிக் காலம் நிறைவடையும் வரை மாதம்தமக்குவழங்கப்படுகின்ற கொடுப்பனவுகளை ஒரு நிவாரணமாக அரசுக்கு வழங்குவதற்கு சபை ஏகமனதான ஒரு முடிவை எடுத்திருக்கின்றது.

ஏனைய அனைத்து உள்ளூராட்சி மன்றங்களையும் அதில் அங்கம் வகிக்கின்ற உறுப்பினர்களையும்தங்களை முன்னுதாரணமாகக் கொண்டு செயற்பட வேண்டும் என நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹீர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சபையின் 50 ஆவது கூட்ட அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை சபை மண்டபத்தில் தவிசாளர் எம்.ஏ.எம் தாஹீர் தலைமையில் இடம் பெற்ற வேளை மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக எட்டப்பட்டது. தவிசாளர் உட்பட அகில இலங்கை மக்கள் காங் கிரஸ் கட்சி 6 உறுப்பினர்கள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி 6 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினரும் நிந்தவூர் பிரதேச சபை உப தவிசாளருமான வை.எல். சுலை மாலெப்பை ஆகி யோர் இணைந்து தவிசாளரின் கோரிக்கைக்கு ஏகமனதாக ஆதரவைத் தெரிவித்து இந்த முடிவை மேற்கொண்டனர்.

# கிண்ணியா வெள்ளாம்குளத்தில் யானைகள் நள்ளிரவு அட்டகாசம்

(ஹஸ்பர்)

திருகோணமலை கிண்ணியா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வெள்ளாங்குளம் கிராமத்துக்குள் நேற்று முன்தினம் இரவு காட்டு யானைகள் புகுந்து பலசேதங்களை ஏற்படுத்தியுள்ளன.

இக்கிராமத்தில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. விவசாயம், விறகு எடுத்தல் போன்ற தொழில்களை அவர்கள் செய்து வருகின்றனர்.

நேற்று இரவு இரண்டுக்கும் மேற்பட்ட யானைகள் அந்தக் கிராமத்துக்குள் புகுந்து அட்டகாசம் செய்தன என அந்த மக்கள் கூறுகின்றனர்.

சுமார் பதினைந்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள், சிறு குடிசை, பாதுகாப்பு வேலி என்பன வற்றையும் அவை துவம்சம் செய்துள்ளன.

நான்கு வருடங்களாகப் பாதுகாக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு வந்த காய்க்கக் கூடிய நிலையிருந்த தென்னை மரங்கள் வேரோடும், குருத்தோடும் பிடுங்கி அழிக்கப்பட்டுள்ளன.

இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக கிராமத்தவர் கூறுகின்றனர். ஏற்கனவே யானைப் பாதுகாப்பு வேலி போடப்பட்டும் அதனால் பயன் இல்லையெனவும் அவர்கள் கவலை தெரிவித்தனர். உரிய அதிகாரிகள் காட்டு யானைகளின் தொல்லைகளில் இருந்து பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# நியமனம்

அம்பாறை மாவட்டத் திட்டமிடல் பணிப்பாளராக திட்டமிடல் சேவையில் முதலாம் தரத்தைச் சேர்ந்த ரி.மோகனகுமார் நியமிக் கப்பட்டுள்ளார்.

இதுவரை மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றிய கே.பாக்கியராஜ் அண்மையில் நகர அபிவிருத்தி அமைச்சுக்குப் பணிப்பாளர் நாயகமாக பதவியுயர்வு பெற்றுச் சென்றமையையடுத்து, ஏற்பட்ட வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

# திருமலையில் வறிய குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் அன்பளிப்பு




(ஹஸ்பர்)

சுவிற்ஸ்சர்லாந்து பேர்ன் மாவட்டம் மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர்பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணி மையத்தினால் திருகோணமலையில் 50 வறிய குடும்பங்களிற்கு உலருணவுப்பொதிகள் நேற்று முன்தினம் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வு அறப்பணி மையத்தின் திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் ஆசிரியர் சக்தி திருச்செந்தூரன் தலைமையில் இடம்பெற்றது.

இவ்வுலருணவுப்பொதிகள், அமெரிக்காவின் கலிபோர்னியா வாழ் ஆதிபராசக்தி அம்மாவின் பக்தரான சக்தி கோகிலா அருணின் நிதிப்பங்களிப்பில் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, அன்புவழிபுரம், செல்வநாயகபுரம், கண்ணியா, உதயபுரி, வரோதயநகர் ஆகிய வாழ்வாதாரத்தை இழந்த வறிய மக்களுக்கு சுமார் இரண்டாயிரம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

# விசேடதேவையுடையவர்களுக்கான மெய்வன்மை நிகழ்வு திருமலையில்




(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட விசேட தேவையுடையவர்களுக்கான வருடாந்த மாவட்ட மெய்வன்மைப் போட்டிகள் நேற்று முன்தினம் திருகோணமலை ஸ்ரீகோணேஸ்வரா இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் பி.எச்.என்.ஜயவிக்ரம போட்டிகளை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

"விசேட தேவையுடையவர்களாகிய தங்களின் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்ற கிடைத்தமையை பெரும்பாக்கியமாக கருதுகின்றேன். நீங்கள் அனைவரும் எமது சகோதரர்கள். உங்களுக் குறிய பாதுகாப்பை வழங்க வேண்டியது எம்மனைவரதும் பொறுப்பாகும். அங்கவீனர்கள் என்ற வசனத்தைக் கூட நாங்கள் பயன்படுத்தி உங்களை அசௌகரியப்படுத்தப் போவதில்லை. உங்களது திறன்களை விருத்தி செய்யத் தேவையான உதவிகளை உரிய நிறுவனங்களை இணைத்து வழங்க தயாராக இருக்கிறோம்" – என இதன்போது அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில்களும் அரசாங்க அதிபரால் வழங்கி வைக்கப்பட்டன.

அத்துடன் விசேட தேவையுடைய ஒருவருக்கு இதன்போது சக்கர நாற்காலி ஒன்றும் மாவட்ட செயலக பிரதம கணக்காளர் எஸ்.பரமேஸ்வரனினின் சொந்த நிதியில் வழங்கிவைக்கப்பட்டது. மாவட்ட செயலக சமூக சேவைகள் பிரிவு இதனை ஒழுங்கு செய்திருந்தது.

இந் நிகழ்வில் திருகோணமலை வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ். சிறீதரன், துறைசார் தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# நகர்ப்புறங்களில் விவசாயம் செய்யக்கூடிய காணிகளை அடையாளம் காணப் பணிப்புரை!

## பிரதமர் ரணில் விடுத்தார்



உணவு நெருக்கடிக்கு தீர்வாக நகர்ப்புறங்களில் விவசாயம் செய்யக்கூடிய பயன்பாட்டுக் காணிகளை அடையாளம் காணுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

நாட்டில் நிலவும் உணவுப் பற்றாக்குறை மற்றும் உணவு நெருக்கடி தொடர்பாக விவசாயத்துறை பிரதிநிதிகளை பிரதமர் நேற்று (வெள்ளிக்கிழமை) சந்தித்து கலந்துரையாடினார்.

கலந்துரையாடலின் போது, விவசாயப் பொருள்களின் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்வதற்காக அத்தியாவசிய விவசாய வழங்கல் சட்டம் என பெயரிடப்பட்ட புதிய சட்டம் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படும் எனப் பிரதமர் தெரிவித்தார். உக்ரைனில் நடைபெற்று வரும் யுத்தம் காரணமாக உலகம் கோதுமை மற்றும் உரப் பற்றாக்குறையை எதிர்நோக்கி வருவதாகவும் சுட்டிக்காட்டிய பிரதமர், தட்டுப்பாடு அதிகரிக்கும் போது உடனடித் தீர்வு நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் இலங்கையின் உணவு விநியோகம் மோசமடையும் என்றும் விளக்கினார். நாடு ஆபத்தான நிலையில் உள்ளது என்றும் அதை மீட்க ஒருங்கிணைந்த முயற்சி தேவை என்றும் அவர் மேலும் கூறினார்.



## இலங்கைக்கான அமெ.தூதர் சபாநாயகரைச் சந்தித்தார்!

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை நேற்று (வெள்ளிக்கிழமை) நாடாளுமன்றத்தில் சந்தித்தார்.

அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்தி தற்போதைய பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்ள புதிய பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்தால் முடியும் என தான் நம்புகிறேன் என அவர் இதன்போது குறிப்பிட்டார்.

அதேபோன்று மக்கள் எதிர்பார்க்கும் அரசியல் மறுசீரமைப்புகளை மேற்கொண்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இலங்கை – ஐக்கிய அமெரிக்க நாடாளுமன்ற நட்புறவுச்சங்கத்தின் ஊடாக இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் மேம்படுத்த எதிர்பார்க்கிறேன் எனவும் ஜூலி சங் தெரிவித்தார்.

நாடாளுமன்ற பெண் உறுப்பினர்களின் ஒன்றியம் மேற்கொள்ளும் பணிகளைப் பாராட்டிய அவர் நாடாளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் அவசியம் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்த ஐக்கிய அமெரிக்கா தொடர்ந்தும் வழங்கிவரும் பங்களிப்புக்குச் சபாநாயகர் தனது நன்றியைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற செயலாளர் நாயகம்தம்மிகதசநாயக்கவும்கலந்துகொண்டார். ஜூலி சங் இந்நாட்டுக்கான ஐக்கிய அமெரிக்க தூதுவராக நியமிக்கப்பட்டமையை அடுத்து சபாநாயகருடன் இடம்பெற்ற முதலாவது சந்திப்பு இதுவாகும்.

## ஊடகவியலாளர் நடேசனின் நினைவேந்தலும் நூல் வெளியீடும்!



யாழ்.ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நாட்டுப்பற்றாளர் ஜயாத்துரை நடேசனின் 18 ஆவது நினைவேந்தலும் நூல் வெளியீடும் யாழ்ப்பாணத்தில் நாளை (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ளது.

நாவலர் கலாசார மண்டபத்தில் பி.ப. 3.30 மணிக்கு யாழ்.ஊடக அமையத்தின் தலைவர் ஆ.சபேஸ்வரன் தலைமையில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அந்நிகழ்வில் நடேசன் தொடர்பில் அவருடன் ஊடகப்பணியாற்றிய சக ஊடகவியலாளர்கள்,செயற்பாட்டாளர்களென பலரது நினைவு கூரலுடன் வெளிவந்துள்ள நூல் அறிமுகமும் வெளியீடும் நடைபெறவுள்ளது.

அதேவேளை 'நடேசனின் ஊடகத்துறை பயணம்' தொடர்பிலான நினைவுரைகளுடன் ஞாபகார்த்த நினைவுப்பேருரையை யாழ்.பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கோசலை மதன் ஆற்றவுள்ளார்.

'அரசியல் மற்றும் இதர நெருக்கடிகளை அரசமைப்பு தீர்வுகள் மூலமாக முகாமை செய்தல்' – இலங்கையில் அதற்கான சாத்தியங்களும் சவால்களும் எனும் தலைப்பில் அவரது உரை முன்னெடுக்கப்படவுள்ளது.

நிகழ்வின் இறுதியாக ஊடகவியலாளர்களது தயாரிப்பில் உருவாக்கப்பட்ட ஆவணப்படம் காட்சிப்படுத்தல் இடம்பெறவுள்ளது.

வடமராட்சி கரவெட்டியில் பிறந்த மூத்த ஊடகவியலாளர் ஜயாத்துரை நடேசன் 2005 ஆம் ஆண்டின் மே 31 ஆம் திகதி மட்டக்களப்பில் வைத்து சுட்டுப்படுகொலைசெய்யப்பட்டிருந்தார்.

## சட்டத்தை சவாலுக்குட்படுத்தும் வகையில் செயற்பட வேண்டாம்

### ஐக்கிய மக்கள் சக்தி பொலிஸ்மா அதிபருக்குக் கடிதம்

வன்முறைகளில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வதற்குப் பதிலாக , அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படுகின்றமை சட்டத்தை சவாலுக்கு உட்படுத்தும் செயற்பாடாகும்.

இவ்வாறான செயற்பாடுகள் துரிதமாக நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தி பொலிஸ்மா அதிபர் சி.டீ.விக்கிரமரத்னவிற்குக் கடிதம் அனுப்பியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாரவால் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

கடந்த 9 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டுஅமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட நபர்கள் காணொலிகளைப் பயன்படுத்தி பொலிஸாரால் கைது செய்யப்படுகின்றனர்எனத்தெரியவந்துள்ளது.

9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைகளுடன் தொடர்புடைய நபர்கள் அல்லது அவற்றுக்கு தலைமைத்துவம் வகித்த நபர்களை கைது செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாததோடு , சட்டமா அதிபரின் ஆலோசனைகளையும் கவனத்தில் கொள்ளாமல் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் கைது செய்யப்படுகின்றமை சட்டத்தை சவாலுக்குட்படுத்தும் செயற்பாடாகும்.

வன்முறைகளில்ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படுவதற்கு முன்னரே , ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்படும் நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுமக்களை உணவுப் பஞ்சத்தில் இருந்து பாதுகாக்க நல்லூர் பிரதேச சபை திட்டம்!




நாட்டின் பொருளாதார மந்த நிலையை கருத்திற்கொண்டு நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் வசிக்கும் பொதுமக்களின் நலன் கருதி பிரதேச சபையால் இரண்டு திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன என நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் பத்மநாதன் மயூரன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச சபையில் நேற்று (வெள்ளிக்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் –

பொதுமக்களை உணவுப் பஞ்சத்தில் இருந்து பாதுகாக்கவும் வறுமை நிலையிலிருந்து தணிப்பதற்கும் பிரதேச சபையின் நிதிப் பங்களிப்புடன் தனியார் மற்றும் தொண்டு நிறுவனங்களின் ஆதரவுடன் இரண்டு வேலைத்திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

நல்லூர் பிரதேச சபையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய குறுங்கால வீட்டுத் தோட்டப்பயிர் செய்கையை ஊக்குவிக்கும் முகமாக வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலகத்தின் ஊடாகப் பெறப்படும் பயனாளிகளுக்கு விதைகள் நாற்றுகள் இயற்கைப் பசளை வழங்கப்பட்டு அதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

மேலும் சனசமூக நிலையங்களைத் தயார்ப்படுத்தி உணவுப் பஞ்சம் பற்றாக்குறையில் இருக்கும் குடும்பங்களுக்கு உடனடியாக உணவுப் பொதிகளை வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காணி வசதியுள்ளவர்கள் கண்டிப்பாக வீட்டுத் தோட்டங்களை உருவாக்கி மேம்படுத்த வேண்டும். அவர்களுக்கு எந்த உதவிகளையும் நல்லூர் பிரதேச சபை மேற்கொள்வதற்குத் தயாராக உள்ளது. எம்முடன் இணைந்து உதவுவதற்குத் தனியார் தொண்டு நிறுவனங்களும் தயாராக உள்ளன. – என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.05.2022இல் வெளியிடப்பெற்றது.